1980 ஜூலை 22]

(அ) தஞ்சை மாவட்டத்தில் மின்சக்தி பற்றாக்குறையை போக்க தூத்துக்குடி அனல்மின் நிலையத்தின் மின்சாரம்கொண்டு வரும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : தூத்துக்குடி அனல்மின் நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் உட்பட தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் பொதுவான ஒரு இணைப்புடன் (common grid) சேர்க்கப்பட்டு மின்பங்கீட்டு (load centres) இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து திருவாரூருக்கு மின்சாரம் கொண்டு வரும் பணியில் காரைக்குடி வழியாக வருவதற்கான லைன் அமைக்கும் பணி இன்னும் முடிவு பெறாமல் இருப்பதாகத் தெரிகிறது. அது எப்பொழுது முடிந்து மின்சாரம் வழங்கப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப் பெறுகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மொத்தமாக எத்தனை ஜெனரேட்டர்கள் இருக்கின்றன. இரண்டாவது மின் உற்பத்தி திட்டம் ஆரம்பிக்கப்பெற்றுவிட்டதா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் கொண்ட 3 யூனிட்கள் நிறுவப்படும் என்பதுதான் இத்திட்டம். ஆக மொத்தம் 630 மெகாவாட். அதில் ஏற்கெனவே ஒரு யூனிட் இயங்க ஆரம்பித்து விட்டது. இரண்டாவது யூனிட் இந்த செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திற்குள் வரும என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

நீதித்துறையில் நடுவர் பதவிகளை ஒரு நிலைப்படுத்தும் திட்டம்.

*கு. கா. வி. எண். 33 திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீதித்துறையில் குற்றவியல் நீதிமன்றங்களில் இரண்டாம் வகுப்பு நடுவர்கள் (second class magistrates)—பதவியை முதல்

1980 ஜூலை, 22]

வகுப்பு நடுவர்காளக (Frist class magistrates) உயர்த்தி ஒரு நிலைப்படுத்தும் (Integration) திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், இத்திட்டம் எப்பொழுது செயல்முறைப் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, ஒரு சட்டத்தை உருவாக்கி, சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தை அமுல்படுத்த, அரசு தீர்மானித் துள்ளது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அப்படி இத்திட்டம் நிறைவேற்றப்பெறுகிற நேரத்தில் சப் மாஜிஸ்ரேட் கோர்ட்டாக உள்ளது முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளாக மாறுகிற அளவிற்குத் தமிழகத்தில் உயர்நிலை பெறுகிற இடங்கள் ஏதாவது உள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பல இடங்கள் உள்ளன. அது பற்றி ஒருங்கிணைப்புத் திட்டம் வந்த பிறகு முடிவு மேற்கொள்ளப் பெறும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர் களே, இரண்டாம் வகுப்பு மாஜிட்டிரேட்டுகள் வேலை நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் வந்த பிறகு அந்த நிலைமை சரிசெய்யப்பெறும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த ஒருங் கிணைப்புத் திட்டத்தின் மூலமாக முன்சீப் அதிகாரத்தை சப் மேஜிஸ்டிரேட்டுக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதிகாரத்தை இருவரும் பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் ஆரம்பிக் கப் பெற்றிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர் களே, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் தற்காலிகமாக

1980 ஜூலை 22]

பதவியில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்களில் 3 ஆண்டுகளுக்கு மேலாக பணியில் இருக்கிறவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாக்க நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்படுவதைப்போல, அந்த மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிக்காலம் எத்தனை வருடங்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் சர்வீஸ் கமிஷனின் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பி அதன்மூலம் எடுத்துக் கொள்ள அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, எவ்வளவு பதவிகள் நிரந்தரம் செய்யப்பெற வேண்டும் என்று கணக்கிடப்படுகிறதோ அவ்வளவு பதவிகளும் சர்வீஸ் கமிஷனின் மூலமாகத்தான் நிரந்தரம் செய்யப்பெறும்.

அழகர் அணைத் திட்டம்.

*கு. கா. வி. எண். 34— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம் அழகர் அணைத்திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்தை செயலுக்கு கொண்டு வர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கு வைகை நதியிலிருந்து தண்ணீர் கொடுக்க வாய்ப்பில்லாததால், வேறு எவ்வகையில் இத்திட்டத்திற்கு நீர் கொண்டு வரலாம் என்பது பற்றிய சாத்திய கூறுகள் மேற்பார்வைப் பொறியாளர் (ஆய்வு), திருச்சி, அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டுத் திட்டம் 1964—ஆம் ஆண்டிலே துவங்கப்பெற்றது. ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆய்வு நடத்தி பிறகு நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பெற்றுவிட்டது. ஆகவே, கூடியவிரைவில் இத்திட்டத்தை தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர்அவர்களே, இந்தத் திட்டம் இன்னும் ஆய்வு அளவிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. தவிர அரசு கொள்கை ரீதியில் ஆய்வு எல்லாம் நடத்தி திட்டம் ஆரம்பிக்கப் பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பெறவில்லை. எனக்கு கிடைத்திருக்கிற தகவலின்